# தமிழகச் சட்டப் பேரவை

## சனிக்கிழமை, 1967 ஜூலை 1.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. சி. பா. ஆதித்தனர்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பேரவைக் கூட்டத்தில் முதல் அலுவல் " வினக்கள்—விடைகள் ". மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கிற வினக்களுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் விடை அளிப்பார்கள்.

### கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

***126 வினு—திரு. எஸ். ஜே. ராமசாமி :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1967-ம் ஆண்டு சென்னை மாநில கூட்டுறவு நெசவாளா சங்கத்திற்கு வடார்க்காடு மாவட்ட மத்திய பாங்கின் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டு டைரக்டராக பதவி வகித்து வந்தவரின் நியமனம் செல்லாது என்று அறிவிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அவர் மேற்படி சங்கத்தில் இன்னும் பதவி வகிப்பதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) திரு. எஸ். கே. சுப்பிரமணிய முதலியாரை, வளர்புரம் செல்வ விஞயகர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பிரதிநிதியாக அனுப்பியது சட்டப்படி செல்லாததென்று கைத்தறி (நெறியாளர்) வேலூர், வட ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவு மத்திய பாங்கின் செயலாளருக்கும் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கத்தின் வியாபார நிர்வாகிக்கும் 14–4–1967-ல் தெரிவித்தார். 1963-ம் ஆண்டு தமிழக கூட்டுறவுச் சங்க விதிகளின் 40-வது விதியின்படி பிரதிநிதியாயிருக்கத் தகுதி அற்றவரெனச் செய்வதற்கு வழக்கமான அறிவிப்பு கொடுத்த பின்னர் நடவடிக்கை எடுக்குமாறு வேலூர் கூட்டுறவுத் துணைப் பதிவாளருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**திரு. மா. பா. சாரதி :** மேலும் அவர்கள் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறார்கள். அப்படியிருப்பது முறைக்கு விரோதமானது அல்லவா ? உடனடியாக அவர்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** உறுப்பினராக இருக்கிற வரை நீக்கவேண்டுமென்றால் அதற்குக் காலம் முன்கூட்டியே அறிவிக்க வேண்டியிருக்கிறது. அப்படி முன்கூட்டியே காலம் அறிவித்து விட்டு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்படி துணைப் பதிவாளர் அவர்களுக்கு உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

**திரு. ந. தருமலிங்கம் :** சென்னை மாநில கைத்தறி கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக உள்ள ஒருவரைக் கைத்தறி நெசவாளர்கள் சமுதாயத்தின் பிரதிநிதியாக நமது பேரவையின் உறுப்பினராக ஆக்குவதற்கு இந்த

அரசுக்கு எண்ணம் உண்டா ? அப்படியிருந்தால் அதைத் தேர்தல் கமிஷன் அல்லது மத்திய சர்க்காரைக் கலந்து கேட்டுத்தான் செய்ய வேண்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அங்கத்தினர் கேட்ட கேள்வி இந்தக் கேள்வியோடு தொடர்பு உடையது இல்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** அவர்கள் யார் என்று அறிவிக்க முடியுமா ? அதே போன்று தொடர்ந்து பல குறைபாடுகள் இருந்த தென்று அறிவித்ததற்குப் பிறகும் தொடர்ந்து நீடிக்க வைப்பதன் காரண மாக கூட்டுறவு கைத்தறிச் சங்கம் பாதிக்கப்படுகிறது. ஆகையால் அதை முன்னிட்டாவது துரிதமாக நடவடிக்கை எடுத்து ஊழல்கள் ஏற்படாமல் இருப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவர்கள் தக்கோலத் தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிகிறது. முன்பு அவர் அங்கு கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினராக இருந்தார். வளர்புரி செல்வ விநாயகர் நெச வாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பிரதிநிதியாக அனுப்பியது சட்டப்படி செல் லாது என்று தெரிவித்த காரணத்தால் சட்டப்படி, ஒழுங்குப்படி, நீதியின் படி செயல்கள் ஆற்றப்பட வேண்டும் என்பதுதான் இந்த அரசின் நோக்கம். ஆகவே, தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### அகில இந்திய கைத்தறி போர்டு.

*127 வினு.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) பம்பாயிலிருக்கும் அகில இந்திய கைத்தறி போர்டு தலைமை அலுவலகத்தை சென்னைக்கு மாற்றும்படி இம்மாநில அரசு கேட்டுள்ளது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இது தமிழ்நாடு கைத்தறி சம்மேளனத்தின் சார்பிலும் சரி, அங்கேயுள்ள கதர் சம்பந்தப்பட்ட அதி காரிகளின் சார்பிலும் சரி பம்பாயிலே அந்த போர்டு இருப்பதினாலே அங்கே நெசவுத் தொழில் பாதிக்கப்படுகிறது. அதை மாற்ற வேண்டு மென்று கூறியிருக்கிறார்களா ? அந்த அடிப்படையில் மாற்றுவதற்கு மீண்டும் அது சம்பந்தமாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அகில இந்திய கைத்தறிக் கழகம் 1952-ல் நிறுவப்பட்டது. அதனுடைய தலைவர்தான் டெக்ஸ்டைல் கமிஷனராகவும் இருக்கிறார். பம்பாயிலேதான் டெக்ஸ்டைல் கமிஷனரின் அலுவலகம் இருக்கிறது. ஆகையால், வசதியைப் பொறுத்து அங்கே நிறுவப்பட்டிருக்கிறது. ஆனால், அகில இந்திய கைத்தறிக் கழகத்தினு டைய கூட்டங்கள் இந்தியாவில் பல்வேறு பகுதிகளிலும் அங்கங்கே நடை பெறும். ஆதலால் அதை மாற்றவேண்டிய அவசியம் இல்லை என்று தெரிகிறது.

**THIRU. K. VINAYAKAM : Even if this Government decides to shift it, it is not within the powers of the State Government. Because, it is an All India Organisation being controlled by the Central Government. Under these circumstances, will the Government consider the possibility of establishing a branch office of the headquarters at Madras ?**